செ.வெ.எண்: நாள்:10.01.2022

நாமக்கல் மாவட்டம்

**சுகாதார பணியாளர்கள், முன்களப் பணியாளர்கள் மற்றும் 60 வயதிற்கு மேற்பட்ட இணை நோய் உள்ளவர்களுக்கு முன்னெச்சரிக்கை தவணை கோவிட் தடுப்பூசித்திட்டத்தின் கீழ் (Precaution Dose) தடுப்பூசிப்போடும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி.சிங் இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்து, பார்வையிட்டார்.**

-----

நாமக்கல் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சுகாதார பணியாளர்கள், முன்களப் பணியாளர்கள் மற்றும் 60 வயதிற்கு மேற்பட்ட இணை நோய் உள்ளவர்களுக்கு முன்னெச்சரிக்கை தவணை கோவிட் தடுப்பூசித்திட்டத்தின் கீழ் (Precaution Dose) தடுப்பூசிப்போடும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி.சிங் இ.ஆ.ப., அவர்கள் இன்று (10.01.2022) தொடங்கி வைத்து, பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்தாவது,

நாமக்கல் மாவட்டத்தில் சுகாதாரப் பணியாளர்கள், முன்களப்பணியாளர்கள், 60 வயதிற்கு மேற்பட்ட இணை நோய் உள்ளவர்கள் என இன்றைய தினம் மொத்தம் 6,077 நபர்கள் பூஸ்டர் டோஸ் தடுப்பூசி போட தகுதியானவர்களான உள்ளார்கள். இன்றைய தினம் நாமக்கல் மாவட்ட அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் பூஸ்டர் டோஸ் தடுப்பூசி போடும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. இதனைத்தொடர்ந்து மாவட்டத்தின் மற்ற அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மருத்துவபணியாளர்கள் மூலமாக தடுப்பூசி போடப்படவுள்ளது. அதற்கான இணையதளமும் தற்போது திறக்கப்பட்டுள்ளது. தகுதியானவர்கள் அனைவரும் பூஸ்டர் டோஸ் தடுப்பூசி போட்டுக்கொள்ளவேண்டும்.

இன்றைய தினம் 60 வயதிற்கு மேற்பட்ட 1,081 நபர்கள் பூஸ்டர் டோஸ் தடுப்பூசி போட தகுதியானவர்களான உள்ளார்கள். நாமக்கல் மாவட்டத்தில் மொத்தம் 600 படுக்கை வசதிகள் கொண்ட கொரோனா சிறப்பு சிகிச்சை மையங்கள், வட்டார அளவில் உள்ள தரம் உயர்த்தப்பட்ட 14 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் தலா 30 படுக்கை வசதிகள், அரசு மருத்துவ கல்லூரி, விவேகானந்தா மருத்துவ கல்லூரி மற்றும் அரசு மருத்துவமனைகள் உள்ளிட்ட இடங்களில் மொத்தம் 2,480 படுக்கைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

தற்போது கொரோனா நோய்த்தொற்று பாதிக்கப்பட்டவர்களில் 80 நபர்கள் மருத்துவமனையில் அனுமதிப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றார்கள். மீதமுள்ளவர்கள் வீட்டுதனிமையிலும், சிறப்பு சிகிச்சை மையங்களும் சிகிச்சை

அளிக்கப்பட்டு வருகின்றார்கள். இதில் 20 சதவிகிதத்திற்கும் குறைவானவர்கள் மட்டுமே மருத்துவமனைகளில் படுக்கையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

தற்போதைய அலையின் தீவிரத்தன்மையானது, அதிகளவிலான சிறப்பு சிகிச்சை மையங்களை ஏற்படுத்துதல், படுக்கை வசதி ஏற்படுத்துதல் என்பதே முக்கியமான ஒன்றாகவுள்ளது. தீவிரமான பாதிப்பு என்ற நிலையில் மருத்துவமனைகளில் படுக்கையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிப்பது என்ற அளவில் இல்லாமல் பாதிப்பு குறைவாகவே இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது மருத்துவமனைக்கு வருபவர்களும் ஆக்சிஜன் தேவை என இல்லாமல், தொற்றின் அறிகுறிகள் என்பது சிறிய அளவிலேயே உள்ளது. தொற்றுபாதிக்கப்பட்டவர்கள் தங்களை தனிமைப்படுத்தி கொள்ள வேண்டும். இல்லையெனில் பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து மற்றவர்களுக்கு முன்பைவிட மிக விரைவில் பரவிவிடும்.

பொதுமக்களுக்கு கொரோனா நோய்த்தொற்றின் அறிகுறிகள் தென்பட்டால் உடனடியான பரிசோதனை செய்து கொண்டு, தனிமைப்படுத்தி கொண்டால் நோய்த்தொற்றின் பரவலை தடுத்திடமுடியும். நேற்றைய தினம் 87 நபர்களுக்கு கொரோனா நோய்த்தொற்று ஏற்பட்டுள்ளது. அதற்கு முந்தைய தினம் 40 நபர்களுக்கு தொற்று ஏற்பட்டிருந்தது. ஒரே ஒரு நாளில் தொற்றின் பரவல் இரட்டிப்பாகியுள்ளது. பொதுமக்கள் தங்களுக்கு அருகில் உள்ள அனைத்து பரிசோதனை மையங்களிலும் பரிசோதனை செய்து கொள்ளலாம்.

மேற்கொண்டு பொதுமக்களுக்கு சிகிச்சை வசதிகள், மருந்துப்பொருட்கள் தேவை மற்றும் சந்தேகங்கள் இருப்பின், நாமக்கல் மாவட்ட கட்டளை அறைக்கு (வார் ரூம்) 1077, 04286-299135, 04286-299137, 04286-299139, 8220402437 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு, விவரங்களை தெரிவித்தால் தேவையான அனைத்து மருத்துவ ஏற்பாடுகளும் உடனடியாக செய்து தரப்படும்.

கொரோனா நோய்த்தொற்று பாதிக்கப்பட்ட 276 நபர்களில், 220 நபர்கள் வீட்டு தனிமையில் வைக்கப்பட்டுள்ளனர். மீதமுள்ளவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றனர். வீட்டு தனிமையில் உள்ளவர்கள் தங்களுக்கான தனிஅறையில் இருந்திட வேண்டும். பிறருடன் தொடர்பு கொள்ளவதையும், குடும்ப நபர்களுடன் தொடர்பு கொள்வதையும் தவிர்த்த வேண்டும். இல்லையெனில் தொற்று வீட்டில் உள்ள மற்றவர்களுக்கும் பரவிவிடும்.

கொரோனா வார் ரூமில் இருந்து மருத்துவ பணியாளர்கள் மூலம் வீட்டுதனிமையில் உள்ளவர்களிடம் உடல் நலன் குறித்து தொடர்ந்து கேட்கப்பட்டு, 6 மணி நேரத்திற்கு ஒருமுறை உடலின் ஆக்சிஜன் அளவு, உடல் வெப்ப பரிசோதனை (காய்ச்சல்) உள்ளிட்ட பரிசோதனைகள் மேற்கொள்ளவும், தேவையான மாத்திரைகள் உள்ளதை உறுதி செய்திடவும் வார் ரூமில் தனிக்குழு அமைக்கப்பட்டுள்ளது. அவர்கள் வீட்டுதனிமையில் உள்ளவர்களிடம் தொடர்ந்து பேசி கண்காணித்து வருகின்றார்கள். இதுமட்டுமல்லாமல் களப்பணியாளர்கள் நியமிக்கப்பட்டு, வீட்டுதனிமையில் உள்ளவர்களை கண்காணிக்கவுள்ளார்கள். முன்பிருந்ததைபோல் வீடுகளில் ஒட்டுவில்லை ஒட்டும் பணிகள் மேற்கொள்ளப்படபோவதில்லை. எனவே, வீட்டுத்தனிமையில் உள்ளவர்கள் கட்டாயம் தனிமையில் இருப்பதை கடைப்பிடித்திட வேண்டும்.

வெளிநாடுகளில் இருந்து நாமக்கல் வந்த 2 நபர்கள் தானாக முன்வந்து பரிசோதனை மேற்கொண்டார்கள். அவர்களுக்கு கொரோனா நோய்த்தொற்று அறிகுறிகள் இருப்பது தெரியவந்தது உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. தற்போது அவர்கள் குணமடைந்து வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள்.

மாவட்டம் முழுவதும் தற்போது 2,480 படுக்கை வசதிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. கொரோனா சிறப்பு சிகிச்சை மையங்களில் மொத்தம் 600 படுக்கை வசதிகள் உள்ளது, அவற்றை 1000 –ஆக உயர்த்திடும் வகையில் கூடுதல் படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளது.

தற்போது தொற்று கண்டறியப்பட்டவர்களுக்கு சிறிய, சிறிய அறிகுறிகள் மட்டுமே உள்ளது. இதனால் படுக்கை வசதிகளின் தேவை மற்றும் ஆக்சிஜன் தேவை குறைவாகவே உள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் அரசு மருத்துவ கல்லூரி முதல்வர் மரு.சாந்தா அருள்மொழி, துணை இயக்குநர் (சுகாதாரம்) மரு.ஜெ.பிரபாகரன், உதவி இயக்குநர் (சுகாதாரம்) மரு.நக்கீரன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.சி.சீனிவாசன் உட்பட அரசுத்துறை அலுவலர்கள், மருத்துவபணியாளர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.